**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC. 21/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பீட்டர்ரவுஸ் | Prosecution | PW-1 Cross . |
| Father Name | எட்வர்டு | Court | JM, Court, Sirkali. |
| Village | கீழமடவிளாகம் | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 54/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade-III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**05.11.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனது பெயர் பீட்டர் ரவுஸ் மற்றும் எனது அப்பா பெயர் எட்வர்டு ரவுஸ் என்றாலும் சரிதான். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது. நான் இருக்கும் வீடு சொந்தவீடா என்றால் வாடகை வீடு. அதற்கு மாதம் 5000/- வாடகை ஆகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சீர்காழி கோயிலில் நைட் வாட்ச் மேனாக உள்ளேன்,. யாரேனும் கூப்பிட்டால் டிரைவர் வேலை செய்வேன். எனது மாத வருமானம் என்ன என்றால் ரூ.15000/- ஆகும். நான் எத்தனை வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால இரண்டு வங்கி கணக்குகள் வைத்துள்ளேன், அது இந்தியன் வங்கி சீர்காழி கிளை மற்றும் கனரா வங்கி சீர்காழி கிளையில் கணக்கு வைத்துள்ளேன்.

ஆஜர எதிரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது குடும்ப நண்பர் என்ற ரீதியில் தெரியும். எனது குடும்பத்தினர் அனைவருக்கும் அவரை தெரியுமா என்றால் தெரியும். அது போல என்னையும் அவரது குடும்பத்தினருக்கு தெரியும். ஆஜர் எதிரியின் மனைவியின் பெயர் என்ன என்றால் அவரது பெயர் ஞாபகமில்லை. ஆஜர் எதிரிக்கு எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் தம்பி பெயர் மன்சூர் அலி என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளது என்றால் பணம் கொடுக்கல் வாங்கல்தொடர்பாக போடப்பட்டுள்ளது.

நான் பணம் எப்போது எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 10.04.2024 ம் தேதி எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அவர் பணம் எப்போது கேட்டார்

என்றால் 1 வாரத்திற்கு முன்பு கேட்டார். 1 வாரத்திற்கு முன்பு எங்கு வைத்து கேட்டார் என்றால் கோர்ட்டுக்கு எதிர்புறம் உள்ள பெட்ரோல் பங்கில் வைத்து கேட்டார். எனது புகாரிலோ, பிரமான வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ எங்கு வைத்து பணம் கேட்ட விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. யார் முன்னிலையில் என்ன நேரத்தில் கொடுத்தேன் என்று எனது புகாரிலோ, பிரமான வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் Income tax கட்டிவருகிறேனா என்றால் இல்லை. **50 ஆயிரத்திற்கு** மேல் பணம் பரிவர்த்தனை செய்தால் Bank மூலமாக செல்ல வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. **இரண்டரை லட்சம்** பணத்தை நான் எப்படி வைத்திருந்தேன் என்றால் கையிருப்பாக வைத்திருந்தேன். என் வீட்டில் வேறு யாரேனும் வேலைக்கு செல்கிறார்களா என்றால் என் மகன் வேலை செய்கிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் TVS யில் மேற்பார்வையாளராக பணியில் உள்ளார். நான் இரண்டரை லட்சம் பணத்தை வட்டிக்கு கொடுக்கவில்லை குடும்ப நண்பர் என்ற முறையில் தான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

பணம் கொடுக்கும் போது கொடுக்கப்படும் கைலெட்டர் கொடுத்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 19.06.2024 ம் தேதி State Bank காசோலையை வாங்கிகொண்டு அந்த கைலெட்டரை நான் கொடுத்து விட்டேன். இரண்டரை லட்சம் பணத்தை கொடுத்ததாக சொல்லும் நிலையில் அது என்ன வரை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500ரூ தாள்களாக கொடுத்தேன். எத்தனை தாள்கள் கொடுத்தேன் என்றால் அது ஞாபகமில்லை. ஆஜர் எதிரியின் அலைபேசி நம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனது அலைபேசியில் அதில் அவருடைய நம்பர் இருக்கிறதா என்றால் இல்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி என் வீட்டிற்கு நேராக வந்து காசோலையை பூர்த்தி செய்து கையொப்பம் போட்டு கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எத்தனை மணிக்கு மேற்படி காசோலையை கொடுத்தார்கள் மற்றும் யார் முன்னிலையில் கொடுத்தார்கள் என்று எனது புகார் அறிவிப்பு, பிராமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

காசோலையை பார்க்கும் போது எதிரியின் கையொப்பமும் பிற வாசகங்களும் வெவ்வேறு பேனா மையினால் எழுதப்பட்டது போல காணப்படுவதற்கு காரணம் என்ன என்றால் எதிரி ஏற்கனவே காசோலையை நிரப்பி எடுத்து வந்து என் முன்பு அதில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார்.

நான் இது வரையில் என் பெயரிலோ அல்லது என் மனைவி பெயரிலோ ஏலச்சீட்டு போட்டுள்ளேனா என்றால் என் பெயரில் ஒரு ஏலச்சீட்டு போட்டுள்ளேன். அந்த சீட்டு எப்போது சேர்ந்தேன் அதில் எப்போது பணம் எடுத்தேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. அந்த சீட்டு கம்பெணியை நடத்தியவர் யார் என்றால் முருகதாஸ் என்பவர் நடத்தி வந்தார். அவர் இவ்வழக்கில் என் சார்பாக சாட்சியளிக்க அழைத்தால் வருவாரா என்றால் வருவார். நான் தற்போது வரையிலும் எடுத்த ஏலச்சீட்டிற்கு பணம் செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். ஏலச்சீட்டில் பணம் எடுத்த பிறகு பிணை கேட்டார்களா என்றால் கேட்டார்கள். அது எந்த மாதிரியான பிணை என்றால் Cheque leaf பிணை.

ஏலச்சீட்டில் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர் என்றால் சுமார் 20 பேர். ஏலச்சீட்டில் நான் பணம் எடுத்த போது எனக்கு எத்தனை நபர்கள் பிணை கொடுத்தார்கள் என்றால் ஒருவர் தான் கொடுத்தார் அவர் ஆஜர் எதிரி ஆவார். என் சார்பாக முருகதாசுக்கு ஜாமீனுக்காக எதிரி அவரது காசோலை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஏலச்சீட்டு எந்த இடத்தில் வைத்து நடத்தபட்டது என்றால் சீர்காழி கடைத்தெருவில் உள்ள மாவு மில் எதிரே காம்பிளக்ஸ் உள்ளது அந்த காம்ளக்சில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஏலச்சீட்டு நடத்தினார். தற்போது அந்த ஏலச்சீட்டு நடத்தப்படும் அலுலகத்திற்கு நீதிமன்றம் மூலமாக அழைப்பாணை அனுப்பினால் உரிய நபர்கள் வந்து சாட்சியம் அளிப்பார்களா என்றால் வரமாட்டார்கள் ஏனென்றால் அந்த அலுவலகம் தற்போது மூடப்பட்டு விட்டது. எனக்கு ஜாமீனாக முருகதாஸ் வசம் எதிரி காசோலை கொடுத்துள்ளார் என்றாலும் அதனை வசூலுக்கு போடவோ அதை வைத்து வழக்கு போடவோ முருகதாசுக்கு மட்டும் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

நான் ஏலத்தில் பங்கு கொண்ட சீட்டு முடிந்து விட்டது என்றாலும் அந்த அலுவலகமும் மூடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். அந்த அலுவலகம் ஏற்கனவே மூடப்பட்டு சீட்டும் முடிந்து விட்ட நிலையில் முருகதாஸ் வசம் உள்ள காசோலையை பெற்று நான் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**